**ஜனவரி – 03**

# TNPSC துளிகள்

- P.K. ஸ்ரீவஸ்தாவின் பணி ஓய்வையடுத்து 1982 ஆண்டின் இந்திய ஆயுதத் தளவாட தொழிற்சாலைப் பணி (IOFS - Indian Ordnance Factories Service) அதிகாரியான சவுரப் குமார் பீரங்கித் தொழிற்சாலைகளின் பொது மேலாளராகவும் பீரங்கித் தொழிற்சாலை வாரியத்தின் தலைவராகவும் கொல்கத்தாவில் பதவியேற்றுள்ளார்.
- இந்தியப் போட்டி ஆணையத்தின் செயலாளராக P.K. சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிதிச் சேவைகள் துறையானது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான ஹேமந்த் பார்கவாவை அந்நிறுவனத்தின் செயல் தலைவராக அறிவித்துள்ளது.
- ஹாங்காங்கில் நடைபெற்ற உலக நினைவுத் திறன் சாம்பியன்ஷிப்பில் சிங்கப்பூரைச் சேர்ந்த 12 வயதான இந்திய வம்சாவழி மாணவரான துருவ் மனோஜ் 2 தங்கப் பதக்கங்களை வென்றார்.
- IIT ரூர்க்கியின் பேராசிரியரான ஜெயந்தா குமார் கோஷ் தேசிய தொலையுணர் சங்கத்தினால் வழங்கப்படும் சிறப்பான செயலாக்கத்திற்கான 2017 ஆம் ஆண்டின் தேசிய புவி நிலப்பரப்பு விருது (வாழ்நாள் சாதனையாளர் விருது) வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
  - இந்த விருதானது புவி நிலப்பரப்பு அறிவியல் மற்றும் அதன் பயன்பாடுகளின் வளர்ச்சிக்கான அவரின் பங்களிப்பிற்காக வழங்கப்பட்டது.
- பிரான்ஸ் நாட்டின் உன்னதமான சேவைகளுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான 'Legion of Honour' என்ற விருது புத்தாண்டில் கௌரவிக்கப்படுவோர் பட்டியலின்படி, கடந்த ஆண்டு குரோஷியாவைத் தோற்கடித்து உலகக் கோப்பையை வென்ற பிரான்ஸ் அணியின் கால்பந்தாட்ட அணியின் வீரர்களுக்கு வழங்கப்பட்டது.
  - 1998 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற பிறகு 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் 2-வது முறையாக உலகக் கோப்பையை பிரான்ஸ் வென்றது.
- வடக்கு கேரளாவின் காசர்கோடு பகுதியிலிருந்து தெற்கு முனையில் உள்ள மாவட்டமான திருவனந்தபுரம் வரை பாலின சமத்துவம் மற்றும் மறுமலர்ச்சி விழுமியங்களை நிலைநிறுத்துவதற்காக கேரளா முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பெண்கள் 620 கிமீ நீளமுள்ள மகளிர் சுவர் அல்லது வனிதா மதிலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று அமைத்தனர்.
- இந்திய வேகப் பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா 78 விக்கெட்டுகளை வீழ்த்தி 2018 ஆண்டில் சர்வதேச ஆட்டங்களில் அதிக விக்கெட்டுகளை எடுத்த வீரராகியுள்ளார்.
- புகழ்பெற்ற ஆங்கிலம் மற்றும் ஒடியா மொழி எழுத்தாளரான மனோஜ் தாஸ், பெர்ஹாம்பூர் பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்ட இலக்கியத்தில் வாழ்நாள் சாதனைக்கான கபி சாம்ராட் உபேந்திர பன்ஜா தேசிய விருதினைப் பெற்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் மெல்பெர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 137 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை இந்தியா தோற்கடித்தது. இது இந்தியாவின் 150வது டெஸ்ட் வெற்றியாக மாறியது.
  - இது ஆஸ்திரேலியாவில் கிறிஸ்துமஸ் தினத்திற்கு அடுத்த நாள் நடைபெற்ற

போட்டிகளில் இந்தியாவின் முதல் வெற்றியாகும்.

# தேசியச் செய்திகள்

## விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான குழு

- விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான குழுவின் (Doubling Farmers Income - DFI) பரிந்துரைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக அரசானது விரைவில் ஒரு குழுவை அமைக்கவுள்ளது.

### *DFI குழு*

- நாட்டின் ஒட்டு மொத்த விவசாய சூழலியலுக்கான வழிமுறைகளையும் அதனை சீர்திருத்துவதற்கான முறைகளையும் பரிந்துரை செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு இந்த குழுவானது அமைக்கப்பட்டது.
- இந்த நோக்கத்திற்காக அசோக் தால்வாய் தலைமையிலான ஒரு நிபுணர் குழு பரிந்துரைகளை அளிக்கும்படி அமைக்கப்பட்டது.
- இந்த பரிந்துரைகளின்படி விவசாயிகளின் வருமானமானது 2022-ல் இருமடங்காகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அசாமின் பாரம்பரியத்தை பாதுகாக்க குழு

- அசாம் ஒப்பந்தத்தின் 6-வது உட்பிரிவினை அமல்படுத்துவதற்காக உயர்மட்டக் குழு ஒன்றினை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த குழுவானது 1985 ஆம் ஆண்டிலிருந்து விதிமுறை 6 நடைமுறைப்படுத்தப் படுவதற்கான நடவடிக்கைகளின் செயல்திறனை ஆய்வு செய்யும்.
- இது அசாமின் சமூகம், கலாச்சாரம், மொழி அடையாளம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், அவற்றினை மேம்படுத்தவும் தேவையான அரசியலமைப்பு, சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக ரீதியான பாதுகாப்பினை வழங்குகிறது.
- 1979-1985 ஆண்டுகளில் நடைபெற்ற அசாம் கிளர்ச்சிக்குப் பின்னர் 1985 ஆகஸ்ட் 15 அன்று அசாம் ஒப்பந்தம் கையெழுத்தானது.

# சர்வதேசச் செய்திகள்

## GAFA வரி அறிமுகம்

- ஐரோப்பாவில் செய்யப்படும் பெருமளவு வர்த்தகங்களில் உலகளாவிய பெரு நிறுவனங்கள் தங்களது வரிகளை அவர்கள் நியாயமாக செலுத்துவதை உறுதி செய்வதற்காக பிரான்ஸ் நாடானது புதிய GAFA என்ற வரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கூகுள், ஆப்பிள், பேஸ்புக் மற்றும் அமேசான் போன்ற பெரிய இணையதள மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதல் எழுத்துகளிலிருந்து இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய நிதி நிலைத்தன்மை அறிக்கை

- வருடத்திற்கு இருமுறை ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் நிதிநிலைத் தன்மை அறிக்கையின் (Fiscal Stability Report-FSR) 2018 ஆம் ஆண்டிற்கான 18-வது வெளியீட்டை சமீபத்தில் RBI வெளியிட்டுள்ளது.
- இந்த FSR ஆனது நிதிநிலைத் தன்மைக்கான அபாயங்கள் மற்றும் நிதி அமைப்பின் தாங்குதிறன் ஆகியவற்றின் மீதான நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுவினுடைய துணைக் குழுவின் கூட்டு மதிப்பீட்டைப் பிரதிபலிக்கிறது.
- உர்ஜித் படேலின் பதவி விலகலைத் தொடர்ந்து டிசம்பர் மாதம் சக்திகாந்த தாஸ் RBI-ன் ஆளுநராக பொறுப்பேற்ற பின் வெளியிடப்படும் முதல் அறிக்கை இதுவேயாகும்.

***<u>முக்கிய குறிப்புகள்</u>***

- பொது மற்றும் தனியார் துறை வங்கிகளின் ஒட்டுமொத்த வாராக் கடன்களின் விகிதமானது (Gross Non-Performing Assets -GNPA) 2015 மார்ச் மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக அரை வருட வீழ்ச்சியினை அடைந்துள்ளதாக சுட்டிக் காட்டுகின்றது.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 11.5% ஆக இருந்த பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் நிகர வாராக் கடன்களின் விகிதமானது 2018 செப்டம்பரில் 10.8% ஆக குறைந்துள்ளது.
- மறுசீரமைக்கப்பட்ட நிலையான முன்னேற்றங்களின் விகிதமானது 2018 செப்டம்பரில் 0.5% அளவில் சீராக வீழ்ச்சியடைந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கிருஷி கிரிஷாக் பந்து திட்டத்தின் கீழ் 2 முன்முயற்சிகள்

- மேற்கு வங்காள அரசானது கிருஷி கிரிஷாக் பந்து திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு 2 நலத் திட்டங்களை அறிவித்துள்ளது.
    1. 18 முதல் 60 வயது வரையிலான விவசாயிகள் இயற்கையாகவோ அல்லது இயற்கையல்லாத வகையிலோ மரணித்தால் அவர்களின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாயை அரசு வழங்கும்.
    2. ஒரு ஏக்கர் நிலத்தில் ஒற்றைப் பயிரை வளர்ப்பதற்கு ஆண்டிற்கு 2 முறை விவசாயிகளுக்கு ரூ. 2500 கிடைக்கும்.

## மகாராஷ்டிரா 100% மின்சார வழங்கல் இலக்கு

- மகாராஷ்டிர மாநில அரசானது 2018 டிசம்பர் 27 அன்று அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கி 100% மின்சாரம் வழங்கல் எனும் இலக்கை அடைந்துள்ளது.
- அம்மாநில அரசானது 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கப்பட்ட மத்திய அரசின் சௌபாக்யா என்ற திட்டத்தின் கீழ் 100% மின்சாரம் வழங்குவதற்கான

காலக்கெடுவாக 2018 டிசம்பர் 31ஐ நிர்ணயித்திருந்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் நிர்வாகத் தலைவர்

- நீதிபதி அர்ஜான் குமார் சிக்ரியை தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (National Legal Services Authority-NALSA) செயல் தலைவராக குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
- இந்த NALSA ஆனது சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் 1987-ன் கீழ் அமைக்கப்பட்டது.
- சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்குவதற்காகவும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக லோக் அதாலத்தை அமைப்பதற்காகவும் இது நிறுவப்பட்டது.
- இந்தியாவின் தலைமை நீதிபதி இதன் ஆதரவுத் தலைவராகவும் உச்சநீதி மன்றத்தின் மூத்த நீதிபதி இந்த ஆணையத்தின் நிர்வாகத் தலைவராகவும் இருப்பர்.

# விளையாட்டுச் செய்திகள்

## 34 வருட சாதனை முறியடிப்பு

- இந்திய வேகப்பந்து வீரர்களின் மூவர் கூட்டணியான இஷாந்த் சர்மா, முகமது சமி மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் ஒரு நாள்காட்டி வருடத்தில் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி 34 வருடமாக இருந்த சாதனையை முறியடித்தனர்.
- 2018 ஆம் ஆண்டில் 131 விக்கெட்டுகளை வீழ்த்தி மிக வெற்றிகரமான மூவர் கூட்டணியாக இவர்கள் மாறியுள்ளனர்.
- மேற்கிந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஜோயல் கார்னர், மைக்கேல் ஹோல்டிங் மற்றும் மால்கம் மார்ஷல் ஆகியோரால் 1984 ஆம் ஆண்டில் 130 விக்கெட்டுகள் எடுக்கப்பட்டு இந்த சாதனை படைக்கப் பட்டது.

## ரிஷப் பந்த் - உலக சாதனையை சமன்

- விக்கெட் கீப்பர்களான ஜாக் ரூசெல் (இங்கிலாந்து) மற்றும் ஏபி டி வில்லியர்ஸ் (தென் ஆப்பிரிக்கா) ஆகியோர் ஒரே டெஸ்ட் போட்டியில் அதிக கேட்சுகளைப் பிடித்த சாதனையை இந்தியாவின் ரிஷப் பந்த் சமன் செய்துள்ளார்.
- இவர் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் 11 கேட்சுகளைப் பிடித்து முந்தைய சாதனையை சமன் செய்தார்.
- மேலும் இவர் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர்களான நரேன் தம்ஹானே மற்றும் சையத் கிர்மானி ஆகியோரைக் கடந்து ஒரு டெஸ்ட் தொடரில் 20 கேட்சுகளைப் பிடித்த முதல் இந்திய வீரராகவும் ஆனார்.
- ஆஸ்திரரேலியாவின் பிராட் ஹாடின் ஒரே டெஸ்ட் தொடரில் 29 கேட்சுகளைப் பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

# முக்கிய தினங்கள்

## DRDO தினம் - ஜனவரி 01

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது நாடு முழுவதும் உள்ள அதன் ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஜனவரி 01 ஆம் நாள் தனது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த DRDO அமைப்பானது நாட்டை ஏவுகணைகள், ரேடார்கள், சோனார்கள் மற்றும் நீர்மூழ்கி ஏவுகணைகள் மற்றும் பல பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றில் தன்னிறைவு அடைந்ததாக மாற்றியுள்ளது.

- - - - - - - - - - - - - - -